# 3.60 லட்சம் பேர் மெட்ரோவில் பயணம்

**சென்னை, அக். 2–**

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – எம்.ஜி.ஆர்., சென்ட்ரல் மெட்ரோ நிலையம் இடையே, இம்மாதம், 7ம் தேதியில் இருந்து, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது.



மெட்ரோ நிலையங்கள் மற்றும் ரயில்களில், பயணியருக்கு கொரோனா தொற்று பரவாமலிருக்க, நவீன தொழில்நுட்பத்தில், புதிய வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதையொட்டி, ரயில்களில் பயணியர் போக்குவரத்து, படிப்படியாக அதிகரித்து வருகிறது. மெட்ரோ ரயிலில், நேற்று முன்தினம் வரை, 3.60 லட்சம் பேர் பயணம் செய்துள்ளனர். நேற்று முன்தினம் மட்டும், 22 ஆயிரத்து, 65 பயணியர் பயணம் செய்துள்ளனர்.

மொபைல் போனில், 'கியூ ஆர்' குறியீடு பயன்படுத்தி டிக்கெட் பெறும் பயணியருக்கு, 20 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்பட்டுள்ளது.

'டிராவல் கார்டு' வாங்கி பயணம் செய்யும் பயணியருக்கு, 10 சதவீதம் கட்டண சலுகை வழங்கப்படுகிறது.